2005 ஏப்ரல் 6]

திரு. பரிதி இளம்வழுதி: அது ஆய்வில் இருக்கிறதா, ஒய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆய்வில்தான் இருக்கிறது. நீங்கள் ஏற்கெனவே துணைத் தலைவராக இருந்தவர். இதுபோன்ற பிரச்சினைகள் எழுப்பப்படுகிற நேரத்தில் பேரவைத் தலைவர் என்ன பதில் சொல்வாரோ அதே பதிலைத்தான் சொல்கிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்ட அனுமன்தீர்த்தத்தை சுற்றுலா மையமாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்திலுள்ள அனுமன்தீர்த்தத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம். ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள அனுமன் தீர்த்தம் இப்பகுதியின் புண்ணிய தலமாக உள்ளது. அரூரிலிருந்து 16 கிமீ. தொலைவில் புனித ஆறுகளில் ஒன்றான தென்பெண்ணை ஆற்றின் கரையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. ஸ்ரீ ஆஞ்சனேயர், இங்கே அனுமந்தீசுவரர் என்னும் திருப்பெயருடன் அருளி வருகின்றார். தம் பெயரால் விளங்கும் அனுமன்தீர்த்தம் உள்ள தென்பெண்ணை ஆற்றின் வடகரையில் கூப்பிய கைகளுடன் ஸ்ரீராம ஜெபம் செய்துகொண்டு நின்ற கோலத்துடன் அருள்பாலித்து வருகிறார். இங்கே மார்கழி மாதம் வரும்

அனுமன் ஜெயந்தி விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. அருள்மிகு அனுமந்தீசுவரருக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக ஆடி மாதம், தை மாதம் வரும் அமாவாசை நாட்களிலும், புரட்டாசி மாதம் வரும் மகாளய அமாவாசையன்றும், பெண்ணையாற்றில் முழுகி முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்வதால் முன்னோர்களின் ஆத்மா சாந்தி பெறுகிறது, மேன்மை அடைகிறது என்பதும் ஐதீகமாக உள்ளது.

1. சேலம் மற்றும் வேலூர் செல்லும் சுற்றுலாப் பயணிகள் அனுமன் தீர்த்தத்திற்கு வருகின்றனர். நாள்தோறும் உள்ளூர் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

2. ஓய்வுக்கூடம், குடிநீர் வசதிக்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிப்பிட வசதி, திருமண மண்டபம், வாகன நிறுத்துமிடம், கூடத்தில் வைத்து பழங்கால சிற்பங்களைப் பாதுகாத்தல், தீர்த்தம் வர தென்பெண்ணை ஆற்றில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதல், பெண்களுக்கு உடைமாற்றும் அறைகள் ஏற்படுத்துதல் போன்ற அடிப்படை வசதிகள் இத்தலத்திற்கு செய்யப்பட வேண்டியுள்ளது. அனுமன்தீர்த்தத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக 2005-2006 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பரிசீலிக்கலாம் எனவும், சுற்றுலாத் துறை விதிமுறைகளுக்கு ஏற்ப மாவட்ட நிர்வாகம் திட்டப் பணிகளின் மதிப்பீட்டில் 50 சதவிகிதம் ஏற்றுக்கொள்ளும் என்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

3. சுற்றுலா ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அனுமன் தீர்த்தம் என்பது ஒரு மிகப் பெரிய பிரசித்தி பெற்ற ஒரு புண்ணிய தலமாக மக்கள் கருதுகிறார்கள். அது தென்பெண்ணையிலே அமைந்திருப்பதால் அங்கு பூமிக்கு அடியிலிருந்து ஆர்டிசன் சுரப்பி போன்று தானாகவே பொங்கி நீர் வழிகிற ஒரு இடமாக இருந்தது. இப்போது நின்றுவிட்டிருக்கிறது, வறட்சியின் காரணமாக. ஆனாலும் அங்கே அன்றாடம் ஏராளமான மக்கள் வந்து நீராடிவிட்டுச் செல்கிறார்கள். பண்டிகைக் காலங்களில் மிகச் சிறப்பான இடமாக அது திகழ்கிறது.

2005 ஏப்ரல் 6] [திரு. வே. கிருஷ்ணமூர்த்தி]

எனவே, அந்த இடத்தை ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்களின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க சுற்றுலாத் தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதி, தீர்த்தமலையில் 2003–2004 ஆம் ஆண்டில் தீர்த்தமலை கிராமிய சுற்றுலா வளர்ச்சி பணித் திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தீர்த்தமலை சுற்றுப்புற மேம்பாடு, மின் வசதி, சுற்றுலாப் பயணிகளுக்கு இருக்கையுடன்கூடிய இளைப்பாறும் வசதி, புனரமைப்புப் பணிகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் குடிநீர் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தீர்த்தமலையை சுற்றுலா மையமாக அறிவிக்க நிதி ஒதுக்கி இருப்பதையும், அதேபோன்று அனுமன்தீர்த்தத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அறிவித்திருப்பதையும், நான் மனமார வரவேற்கிறேன். இதேபோன்று எங்கள் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில், அதாவது ஒகேனக்கல் போன்ற இடங்களில் சுற்றுலா மையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இவை அனைத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.